**செய்தி வெளியீடு எண்: 793** **நாள்: 15.06.2024**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவை சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் 18.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்று திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 265 கிராம ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களை கொண்ட 410 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,**

"திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 265 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன், பெருமையடைகிறேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12,600 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ரூ.86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களை கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை பிப்ரவரி மாதம் மதுரையில் தொடங்கி வைத்தோம்.

இதுவரை மதுரை, கோவை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்களைக் கொடுத்துள்ளோம். இன்றைக்கு திருப்பூர் மாவட்டத்தில் 265 ஊராட்சிகளுக்கு கிரிக்கெட், வாலிபால், கால்பந்து, சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களை கொண்டு 410 உபகரணங்களின் தொகுப்பை இங்கு வழங்க இருக்கின்றோம்.

இது முக்கியமான நிகழ்ச்சி, ஏனென்றால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினுடைய புதிய இலச்சினையை உங்களுடைய முன்னிலையில் இன்றைக்கு நாங்கள் அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். அதற்காக நாங்கள் பெருமைப்படுகின்றோம், மகிழ்ச்சியடைகின்றோம்.

திருப்பூர் மாவட்டம் தொழில்துறைக்கு மட்டுமல்ல, விளையாட்டுத் துறைக்கும் பல முக்கியமான பங்களிப்பை அளித்துள்ளது. இங்கு கூட நிறைய சாதனையாளர்கள் வருகை தந்திருக்கிறார்கள். திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீரரான தம்பி தருண் 2016ஆம் ஆண்டில் ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று நம்முடைய தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவர். ஆசிய அளவில் நடந்த போட்டிகளில் பல பதக்கங்களை வென்று நம்முடைய தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திருக்கிறார். அதுமட்டுமல்ல 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் ஒன்றிய அளவில் பல சாதனைகளைப் படைத்திருக்கிறார். அவருக்கு நம்முடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனையான தங்கை பிரவீனா வருகை தந்திருக்கிறார்கள். நம்மை பெருமைப்படுத்தி இருக்கிறார்கள். அண்மையில் நடந்த கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் டிரிபிள் ஜம்ப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித் தந்தவர் தான் தங்கை அவர்கள். அதுமட்டுமல்ல,

ஒன்றிய அளவில் நடந்த பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்று திருப்பூருக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திருக்கிறார் சகோதரி அவர்கள், அனைவரின் சார்பாக இரண்டு பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம்.

இந்த இரண்டு பேரும் திருப்பூருக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள். இங்கு வந்திருக்கக்கூடிய அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் இன்னும் சொல்லப்போனால் எங்கள் அத்தனை பேருக்கும் இந்த இரண்டு பேருமே மிகப்பெரிய முன்னுதாரணமாக அமைந்திருக்காங்க. கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை இந்தியாவே திரும்பிப் பார்க்கும்படி வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். கேலோ இந்தியா இளையோர் போட்டிகளில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளி பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் முதல் முறையாக தமிழ்நாடு பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடம் பிடித்தது. அதற்கு முழு காரணம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள் நீங்கள்தான். அடுத்த முறை நிச்சயம் முதல் இடத்தைப் பிடிப்போம் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது.

நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறை எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி CII – Confederation of Indian Industries என்ற அமைப்பு ஜனவரி மாதம் 'Best State Promting Sports' எனும் உயரிய விருதை கொடுத்து நம்முடைய தமிழ்நாட்டை கவுரவப் படுத்தினார்கள் முதலமைச்சரை கவுரவப் படுத்தினார்கள். அதேபோல புகழ்பெற்ற பத்திரிகை The Hindu – Sportstar சார்பாக 'Best State for Promotion of Sports' என்ற உயரிய விருதையும், நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் அந்த விருதை கொடுத்து நம்மை கவர படுத்திருக்காங்க.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கி அதன் மூலம் ஏராளமான ஏழை எளிய மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு உதவிகளை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறோம். இதுவரை 300க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ரூபாய் 6 கோடி அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் நிதி உதவி அளித்துள்ளோம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம் வீரர், வீராங்கனைகளுக்கு தொடர்ந்து உயரிய ஊக்கத் தொகை High Cash Incentives நம்முடைய முதலமைச்சர் அவர்களே தங்கள் கரங்களால் வழங்கி வருக்கிறார்கள். இதுவரை சுமார் 700 வீரர்களுக்கு ரூபாய் 17 கோடிக்கும் மேல் உயரிய ஊக்கத் தொகையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்,

கேலோ இந்தியா இளையோர் போட்டிகள், ஆசிய ஹாக்கி கோப்பை, ஸ்குவாஷ் உலக கோப்பை, உலக அலைச்சருக்கு போட்டி, Cyclothon, சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் 2023, தேசிய ஹாக்கி போட்டி போன்ற பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம். இந்தியாவிலேயே விளையாட்டுத் துறை என்றால் அது தமிழ்நாடுதான் என்ற வகையில் தொடர்ந்து புதுப்புது முயற்சிகளையும் நம்முடைய துறை சார்பாக மேற்கொண்டு வருகிறோம். அதில் மிக முக்கியமானது தான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குகின்ற திட்டம். விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது நகரங்களில் தேங்கி விடாமல் கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்கான முயற்சிதான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்.

கிராமங்களிலிருந்து நிறைய விளையாட்டு துறை திறமையாளர்கள் வரவேண்டும் என்ற அடிப்படையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை துவக்கிவைத்தோம். இந்த விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய நூற்றாண்டு அவருடைய

பெயரால் எத்தனையோ திட்டங்கள், அறிவிப்புகள் இருக்கின்றன. இருந்தாலும் விளையாட்டுத் துறை சார்பாக முதன் முறையாக கலைஞருடைய பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால் அது இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டம்தான்.

கலைஞருடைய பெயரை இந்தத் திட்டத்திற்கு சூட்டியதற்கு மிக முக்கியக் காரணம். ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கவேண்டிய அத்தனை குணாதிசயங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதுதான் அவருடைய சிறப்பு. அதையும் அவருடைய நூற்றாண்டில் நாங்கள் நடத்தி வைப்பது எங்களுடைய துறைக்குக் கிடைத்திருக்கக் கூடிய மிகப் பெரிய பெருமை. இப்போது வழங்கப்படுகின்ற விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி நம்முடைய வீரர், வீராங்கனைகள் உங்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

வெற்றி என்பது சுலபமாக கிடைக்காது கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார். நீண்ட தூரம் ஓடினால் தான் அதிக உயரம் தாண்ட முடியும் என்று கலைஞர் சொல்வார். எனவே விளையாட்டுத் துறை மட்டுமல்ல, நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள எந்த துறையாக இருந்தாலும் அதில் வெல்ல வேண்டும் என்றால் இன்றைய இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வாங்க வந்திருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் இந்த அரசினுடைய முகமாக முதலமைச்சரின் முகமாக  இந்த அரசினுடைய தூதுவராக நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே நம்முடைய. அமைச்சர் அண்ணன் வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்கள் நன்றி தெரிவித்தார். காங்கேயம் தொகுதியிலே சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டு வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள் அவருடைய தாராபுரம் தொகுதிக்கு சிறு விளையாட்டரங்கம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்கான அறிவிப்பு விரைவில் இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார். எனவே இந்த நேரத்தில் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோலத்தான் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பொழுது கொடுத்த வாக்குறுதி. செய்துதான் ஆக வேண்டும் ஏனென்றால் மிகப்பெரிய வெற்றியை தாராபுரம் உட்பட இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாடு நாற்பதுக்கு நாற்பது மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே கொடுத்த வாக்குறுதியை முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பதால் தான் அந்த தொடர் வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய கழக ஆட்சிக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். நேற்று காலை அவருடைய துறையின் சார்பாக ஐம்பெரும் விழா நிகழ்ச்சி நடந்தது.

இந்த விளையாட்டுத் துறை நிகழ்ச்சிக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக இருந்தாலும், அவர் பொதுவாக எல்லாம் படிக்கனும், படிச்சிட்டே இருக்கனும் என்று சொல்வாரு. அவரை அழைத்து வந்து விளையாட வேண்டும் என்று சொல்ல வைத்திருக்கிறேன். எப்படி கல்வி ஒரு குழந்தைக்கு முக்கியமோ அதே அளவு முக்கியம் விளையாட்டு. நேற்று முதலமைச்சர் அவர்கள் அந்த பள்ளி கல்வித்துறை நிகழ்ச்சியில் பேசும்போது சொன்னார். நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். படிங்க. படிப்பு மட்டும்தான் உங்களிடமிருந்து பறிக்க முடியாத சொத்து.

உங்களுடைய உடல்நலன், விளையாட்டுத் திறன் அதையும் உங்களிடத்தில் இருந்து யாரும் பிரிக்க முடியாது. எனவே, முதலமைச்சர் சொன்னதுபோல

'Keep Running, Keep Winning, Keep Shining, Make Tamil Nadu Proud'

என்று கூறிக்கொண்டு கலைஞர் விளையாட்டு உபகரணங்களைப் பெற்ற திருப்பூர் மாவட்டத்தினுடைய அனைத்து ஊராட்சிகளிலும் அந்த ஊராட்சியின் முகவராக உள்ள

மாணவர்கள், இளைஞர் உங்கள் அத்தனை பேரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைக்கின்றேன். இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதில் மிகுந்த பெருமையடைகிறேன். வந்துள்ள அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்."

இவ்வாறு பேசினார்.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு.ந.தினேஷ்குமார், பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஈஸ்வரசாமி, திரு.கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.செல்வராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜே.மேகநாத ரெட்டி இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் திரு.தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப., திருப்பூர் மாநகராட்சி ஆணையர் திரு.ஜி.பவன்குமார் இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கோ.மலர்விழி, சர்வதேச தடகள வீரர் ஒலிம்பியன் திரு.தருண் அய்யாசாமி, தேசிய தடகள வீராங்கனை செல்வி. ஆர். பிரவீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu